




நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்த கலியபெருமாள் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றபோது, தமிழ்நாட்டின் ஒரே பெண் நக்ஸலைட் கைதியாகப் பத்து வருடங்களைச் சிறையில் கழித்த அனந்தநாயகியைச் சந்திக்க நேர்ந்தது. சற்று நேரம் அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது, 'நான் நக்ஸலைட்டே இல்லேங்கறேன். நீ அதுதான்னு போலீஸ்காரங்க முத்திரை குத்தறாங்க. என்ன செய்ய முடியும்? ஜெயில்ல நக்ஸலைட்டுனு போட்டாத்தான் எனக்குத் தபால் வந்து சேருது'' என்கிறார் அனந்த நாயகி.

அனந்தநாயகியின் கணவர் ஆண்டிமடம் விஸ்வநாதன். காங்கிரஸ் எம்.எல்.ஏ-வாகப் பத்து வருடம் இருந்தவர். அனந்தநாயகி அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்தவர்தான்! சூழ்நிலை அவரை 'நக்ஸலைட்' கைதியாக்கியது.

''நான் அஞ்சாவது படிச்ச பிறகு பிரைவேட்டா புலவர் படிப்புக்குப் படிச்சுகிட்டிருந்தேங்க. அப்ப கல்யாண மாயிடுச்சு. அவுரு சப்-ரிஜிஸ்ட்ராரா ஆரம்பிச்சு, டெக்ஸ்டைல் கண்ட்ரோலரா வந்தாரு. இவரைத் திரும்ப சப்-ரிஜிஸ்ட்ரார்ராக்கிட்டாங்க. அப்புறம்தான் அதை ராஜினாமா பண்ணிட்டு உழைப்பாளர் கட்சில சேர்ந்து எம்.எல்.ஏ. ஆனாரு. பிறகு காங்கிரசுல சேர்ந்தாரு.

பத்து வருஷம் எம்.எல்.ஏ-வா இருந்தவரை கட்சிக்குள்ள காமராஜருக்குப் பிடிக்கலே. அதனால் '62 தேர்தல்ல தொகுதியை மாத்திக்குடுத்து இவரைக் கழட்டிவிட்டுட்டாங்க. இவரும் தோத்துப் போயிட்டாரு” என்று கணவர் விஸ்வநாதனின் அரசியல் வாழ்க்கையை நினைவுகூர்ந்தார் அனந்தநாயகி.

5 வருட காலம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலராக இருந்ததைத் தவிர அனந்தநாயகி அரசியலில் ஈடுபடவில்லை. ஆனால், கணவர் விஸ்வநாதன் அரசியலிலிருந்து ஒதுங்கி - சமூகப் பணியில் ஈடுபட்டபோது, அனந்தநாயகி அதில் கலந்துகொள்ள வேண்டிவந்தது.

'' அரியலூருக்குப் பக்கத்துல லிங்கத்தடிமேடுன்னு ஒரு கிராமம். அங்க முருகானந்த அடிகள்னு ஒரு சாமியாரு, ஐந்து, அநாதைப் பிள்ளைங்களை வைச்சு பராமரிச்சுக்கிட்டிருந்தாரு

. அந்த இடத்தைப் பெரிய அநாதை இல்லமா மாத்தணும்னு எங்க வீட்டுக்காரர்கிட்ட குடுத்தாரு, இவுரு முழுமூச்சா அதுல இறங்கினவர்தான், கம்பு, சோளம்னு எது குடுத்தாலும் சரி, பிச்சைக்காரனுக்குத் தர்ற மாதிரி பத்து பைசா, நாலணா எதுவானலும் வாங்கிக்குவாரு. ஒரு மாதிரி. 10, 15 வாத்தியாருங்க வேலை செய்கிற எய்டெட் பள்ளிக்கூடமா அதை மாத்தினாரு'' என்றார்.

1968-ல் விஸ்வநாதன் இறந்ததும், அநாதை இல்லப் பொறுப்பை அனந்தநாயகி மேற்கொள்ள வேண்டியதாயிற்று: அப்போது தன் தங்கை வாலாம்பாளின் கணவர் கலிய பெருமாள் பெருமளவில் உதவி செய்ததாக அனந்தநாயகி குறிப்பிட்டார். இல்லத்துக்கு வேண்டிய தானியங்களைக் கடனுக்குக் கொடுத்து வந்தார்.

'அப்பதாங்க '70-ல் வெடிவிபத்து வழக்கு வந்தது . அப்புறம் ஐயம்பெருமாள் கொலை கேசு, தங்கச்சி, அவ பையன் நம்பியெல்லாம் அரெஸ்ட்டாயிட்டாங்க. பெரிய பையன் வள்ளுவன் வந்து, 'அப்பா தலைமறைவா போயிட்டாரு. பிள்ளைங்கள உங்ககிட்டேயே வெச்சுக்குங்க னு சொல்லிட்டுப் போயிட்டான். அதுங்களுக்குப் பணம் கட்ட நான் எங்க போவேன்? அதனால என் பிள்ளைங்களையும் அவுங்களையும் மிஷன் பள்ளிக்கூடத்திலருந்து நிறுத்திட்டு நாலு மைல் நடந்து போய் அரியலூர்ல படிக்கச் சொன்னேன். அந்தப் பிள்ளைங்க என் பொறுப்பில் இருந்தது போலீசுக்குப் பிடிக்கல.

நீ அந்தப் பிள்ளைங்களைக் காப்பாத்தற தைரியத்துலதான் அவன் (கலியபெருமாள்) தலைமறைவா இருக்கான். அந்தப் பிள்ளைங்கள அனுப்பிருன்னு போலீஸ்காரங்க சொன்னாங்க. 'உனக்கு பண செலவு. எனக்கு வெறும் பேனா மைதான் செலவு. சொல்றபடி செய்யாட்டா உன் பிள்ளைங்களையும் நடுத்தெருவிலே நிறுத்திடுவோம்னு சி.ஐ.டி-ங்க வந்து மிரட்டினாங்க. தெருவில விடுன்னா அது என்ன ஆடா, மாடா? அவுத்துட்டு ஓட்டி விடறதுக்கு? நான் எதுக்கும் கவலைப்படல. கடைசில என் பேர்ல வழக்குப் போட்டு என்னை அரெஸ்ட் பண்ணிட்டாங்க!''

அதற்குப் பிறகு ஆயுள் தண்டனை கிடைத்ததும், பத்து வருடங்கள் வேலூரில் தனிமைச் சிறையில் இருந்தார் அனந்தநாயகி. 'யாரோடவும் பேச முடியாது. வார்டர் கூடப் பேசமாட்டாங்க. பைத்தியம் பிடிக்கறாப்பல ஆயிருச்சு, கண் பார்வை பழுதாகி விட்டது. நரம்புத் தளர்ச்சியோடு கடுமையான இதயநோயும் ஏற்பட்டு விட்டது'' என்கிறார் அனந்தநாயகி. இந்த நிலைமையை டெல்லி பத்திரிகையாளர் கன்ஷ்யாம் பரதேசி சுப்ரீம் கோர்ட்டில் எடுத்துச் சொன்னதையடுத்து அனந்தநாயகியை விடுதலை செய்யும்படி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

அவர் உள்ளேயிருந்த 10 வருட காலத்தில் லிங்கத்தடிமேடு பள்ளிக்கூடம் பெரிதாக வளர்ந்துவிட்டது. 300 அநாதைக் குழந்தைகள் தங்கியிருக்கிறார்கள். மத்திய அரசு மான்யம் கிடைக்கிறது. அனந்தநாயகியின் மகன் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். அவ்வப்போது பழைய நினைவுகளின் துயரம் அழுத்தினாலும் அனந்தநாயகி ஆர்வத்தோடு இருக்கிறார்.

“இப்ப எனக்கு அரசியல்ல ஈடுபாடு இருக்குது. பொதுச் சேவை செய்ய ஆசைதான். இவுங்களும் (கலியபெருமாளின் இயக்கத்தினர்) என்னைக் கலந்துக்க கூப்பிடறாங்க.......

கட்சிக் கொள்கை முன்ன மாதிரி கெடுபிடியா இல்ல மாறியிருக்குது, ஜனங்க மத்தில வேலை செய்யணும்கறாங்க. எனக்கும் ஆசைதான். ஆனா உடம்புதான் இடங் கொடுக்கமாட்டேங்குது. மூட்டுக்கு மூட்டு வலி, நெஞ்சு நோவு'' என்று ஆதங்கப் பட்டார் அனந்தநாயகி.

**- ஜூனியர் விகடன்**
**08.02.1984**